# திருப்பத்தூர் மாவட்டம்.

## மூன்றாம் திருப்புதல் தேர்வு மார்ச்-2023.

### பத்தாம் வகுப்பு / மொழிப்பாடம் : தமிழ்.

**கால அளவு : 2:30 மணி** **மதிப்பெண்கள் : 100**

**பகுதி-1**

**மதிப்பெண்கள்:15** **15x1=15**

**குறிப்பு: (i)அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**(ii)கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக்குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" -இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே

அ) பாடிய,கேட்டவர் ஆ) பாடல், பாடிய

இ) கேட்டவர், பாடிய ஈ) பாடல், கேட்டவர்

2. பாரதியார்__________இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

அ)மனோசக்தி ஆ)கணையாழி

இ)நவசக்தி ஈ)இந்தியா

3. நன்னன் குடிமக்கள், கூத்தர்க்கு அளித்த விருந்து.

அ)தினைச்சோறு ஆ)கறிச்சோறு விருந்து

இ)பாற்சோறு விருந்து ஈ)மான்சோறு விருந்து

4. பின்வருவனவற்றுள் முறையான தொடர்

அ)தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ)தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

இ)தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ)தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

5. 'தண்பெயல்' என்ற சொல்லின் பொருள்.

அ)குளிர்ந்த மண் ஆ)குளிர்ந்த காற்று இ)குளிர்ந்த மழை ஈ)குளிர்ந்த வானம்

6. அருந்துணை என்பதைப் பிரித்தால்__________.

அ)அருமை+துணை ஆ)அரு+துணை இ)அருமை+இணை ஈ)அரு+இணை

7. 'மலர்கள் தரையில் நழுவும்'-எப்போது?

அ)அள்ளி முகர்ந்தால் ஆ)தளரப்பிணைத்தால்

இ)இறுக்கி முடிச்சிட்டால் ஈ)காம்பு முறிந்தால்

8. 'ஆடுக' என்பதன் இலக்கணக் குறிப்பு

அ)வினைத்தொகை ஆ)பெயரெச்சம்

இ)வினையெச்சம் ஈ)வியங்கோள் வினைமுற்று

.9. பாலை நிலத்திற்குரிய பறவைகள்__________

அ)கிளி,மயில் ஆ)நாரை,அன்னம் இ)கோழி,மயில் ஈ)புறா,பருந்து

10. 'ஒரு தலைக் காமம்' என்பது

அ)அன்பின் ஐந்திணை ஆ)கைக்கிளை இ)பெருந்திணை ஈ)பாடாண் திணை

11. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ)உழவு,மண்,ஏர்,மாடு ஆ)மண்,மாடு,ஏர்,உழவு

இ)உழவு,ஏர்,மண்,மாடு ஈ)ஏர்,உழவு,மாடு,மண்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

12. 'காலக்கணிதம்'-கவிதையில் இடம்பெற்ற தொடர்.
அ)இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.
ஆ)என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.
இ)இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்.
ஈ)என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்.

13. ஏழும் வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டியோர்
அ)மண்ணுள் வினைஞர் ஆ)கொல்லர்
இ)பிறர்வினையாளர் ஈ)பெரும்பாணர்

14. சிலப்பதிகாரத்திலும்,மணிமேகலையிலும் அமைந்த பாவகை________
அ)அகவற்பா ஆ)வெண்பா இ)வஞ்சிப்பா ஈ)கலிப்பா.

15. 'பூக்கையைக் குவித்தும் பூவே புரிவொடு காக்க' என்று________,________ வேண்டினார்.
அ)கருணையன் எலிசபெத்துக்காக ஆ)எலிசபெத் தமக்காக
இ)கருணையன் தனக்காக ஈ)எலிசபெத் பூமிக்காக.

## பகுதி – III

(மதிப்பெண்கள் : 18) பிரிவு – 1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி 21-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க** **4x2=8**

16. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக
17. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக?
18. 'மெய்க்கீர்த்தி' – பாடப்படுவதன் நோக்கம் யாது?
19. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக
20. 'நச்சப் படாதவன்' செல்வம் - இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்குப் பொருள் தருக
21. 'செயல்' என முடியும் திருக்குறளை எழுதுக

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி** **5x2=10**

22. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துக் தொழிற்பெயர்களை உருவாக்குக
காண், சிரி, படி, தடு
23. மரபுத் தொடர்களை பொருளறிந்து தொடரில் அமைக்க
1. பசுமரத்தாணிபோல, 2. அவசரக் குடுக்கை
24. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக
1. உதகமண்டலவம், 2. கோயம்புத்தூர்
3. புதுக்கோட்டை 4. திருச்சிராப்பள்ளி
25. சொற்களைப் பிரித்துப் பொருள் தருக.
1. பிண்ணாக்கு 2. பலகையொலி



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

26. கலைச்சொல் தருக.
1. Terminology 2. Epic Literature
27. 'பொறித்த' பகுபத உறுப்பிலக்கணம் தருக
28. 'வசன கவிதை' – குறிப்பு வரைக

பகுதி – III

பிரிவு – I மதிப்பெண்கள் : 18

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி :** 2 x 3 = 6

29. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடஞ்சுட்டிப் பொருள் எழுதுக.
30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக?
31. தானியங்களுக்குத் தமிழகத்தில் வழங்கும் சொற்கள் குறித்து விளக்குக

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி :** 2 x 3 =6
**34ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

32. 'கூத்தனைக்' 'கூத்தன்' – ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு விளக்குகிறது?
33. பெரியாரைத் துணைக் கொள்வதன் சிறப்பு யாது?
34. 'தென்னன் மகளே' – எனத் தொடங்கும் 'அன்னை மொழியே' பாடல்

(அல்லது)

வெய்யோன் ஒளி – எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** 2 x 3 =6

35. வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்று வரும் அணியை விளக்குக?
36. விடைகள் மொத்தம் எத்தனை? அவை யாவை? உதாரணத்துடன் விளக்குக
37. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு
அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV மதிப்பெண்கள் - 25

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 5 x 5 = 25

38. கம்பரின் கவித்திறனுக்கு சான்று காட்டி விளக்குக?

(அல்லது)

காசிக் காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களில் எவையேனும் ஐந்தினை எழுதி, உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு நீங்கள் விருந்தளித்த நிகழ்வை ஒப்பிட்டு எழுதுக



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

39. சமீபத்தில் நீங்கள் படித்த நூலின் சிறப்புகளைக் குறிப்பிட்டு அந்நூலினைப் படிக்கப் பரிந்துரைத்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக

(அல்லது)

பள்ளியைத் தூய்மையாக வைத்திருந்தல் - குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றினைத் தயாரித்து – தலைமையாசிரியரின் ஒப்புதலைப் பெறக் கடிதம் ஒன்று வரைக

40. படம் உணர்த்தும் கருத்துகளை நயமாக ஐந்து தொடர்களில் எழுதுக



41. எண்-7, பாரதியார் தெரு, கோடம்பாக்கம், சென்னை 6-ல் வசிக்கும் முருகேசனின் மகள் சரிகா, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி, தன் விவரப் பட்டியலைத் தயார் செய்கிறார். தேர்வர் தன்னை சரிகாவாகப் பாவித்துப் பணி வேண்டி தன் விவரப் பட்டியலைத் தயார் செய்க

42. அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகளை ஐந்தினைப் பட்டியலிடுக.

(அல்லது)

**மொழிபெயர்க்க:**

Among the five geographical divisions of the Tamil country in Sangam Literature, the Marutam region was the one fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

**குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழிபெயர்ப்பைக் கருவியாக ஆக்குவதன்மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்; பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்ப்பார்க்காமல், நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ளமுடியும்; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும். வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்; நாடு , இன மொழி எல்லைகள் கடந்து ஓருலகத் தன்மையைப் பெறமுடியம். நாடு விடுதலைப் பெற்ற பிறகு, பல நாட்டு தூதரகங்கள் நாம நாட்டில்

நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில், தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

i)ஓரலகத் தன்மையைப் பெறுவதற்கான முக்கிய வழிமுறையாக எதனைக் கொள்ளலாம்?

ii)பிறமொழிகளை கற்பதற்கான வாய்ப்புகளைத் தருவன எவை?

iii)தூதரகங்களின் முதன்மையான பணிகளில் ஒன்று எது?

iv)மொழிபெயர்ப்புக் கல்வியின் பயன்களை எழுதுக.

v)இப்பத்திக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

## பகுதி – V மதிப்பெண்கள் - 24

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி** 3 x 8 =24

43. சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதனை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக?

(அல்லது)

அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் 'விண்வெளிப் பயணம்' என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று வரைக.

44. பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்த நிகழ்வைப்பாராட்டிப் பரிசு பெற்றமைக் குறித்து உனது உறவினருக்குக் கடிதம் எழுதுக

(அ)

கடந்த 26.01.2023-ல் உனது பள்ளியில் நடைபெற்ற குடியரசு தின நிகழ்வு குறித்து அறிக்கை ஒன்று தயார் செய்க.

45. கோபல்ல புரத்து மக்கள் கதைப் பகுதியைக் கொண்டு அன்னமய்யாவின் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உரிய பொருத்தப்பாட்டினை விவரி.

(அ)

அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' என்ற சிறுகதையில் வெளிப்படும் மனித நேயத்தை வெளிப்படுத்துக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com